**Judicial Form No.53**
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**
**STC No. 364/2023**

| | | | |
|---|---|---|---|
| Name | **சிவசங்கர்**(PW1) | Profession | |
| Father's Name | **கருப்புசாமி** | Calling | |
| Village | அவிநாசி | Religion | |
| District | **திருப்பூர் மாவட்டம்** | Age | **42** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17th day of July 2026** by K.Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

(Accused Present)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கைகாட்டி புதூரில் டூ வீலர் ஒர்க் ஷாப் வைத்துள்ளேன். நான் பத்து ஆண்டுகளாக டூவீலர் ஒர்க் ஷாப் வைத்துள்ளேன். 2020 ஆம் வருடத்தில் என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் 20,000. எனக்கு சொந்த வீடு உள்ளது. காசோலை வருடத்தில் கடை வாடகை எவ்வளவு என்றால் ரூபாய் 7000. அந்த காலகட்டத்தில் என்னுடைய குழந்தைகள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு படித்து வந்தார்கள். அரசு பள்ளியில் படித்தார்கள். 2020– 2021 ஆம் வருடத்திற்கான வங்கி கணக்கு பட்டியல் இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நவம்பர் மாதம் 2020 ஆம் வருடத்தில் என் வங்கியின் இருப்பு எவ்வளவு என்றால் நான்காயிரம் ரூபாய்க்கு குறைவாக இருக்கும். சொந்த வீட்டை தவிர எனக்கு வேறு ஏதாவது சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. ஒர்க் ஷாப்பை தவிர எனக்கு வேறு வேலைகள் ஏதாவது உள்ளதா என்றால் வண்டி வாங்கி விற்கும் வேலை செய்வேன். ஒரு வண்டி வாங்கி வைத்தால் ஆயிரம் இரண்டாயிரம் கிடைக்கும் என்றால் சரிதான். காசோலை தேதியான 18.11.2020 அன்று நான் ரூபாய் 7 லட்சம் வைத்திருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை கையில் இருந்து கொடுத்தேன். வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ நான் எந்த வகையில் பணத்தை ரொக்கமாக வைத்திருந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.எதிரி தற்போது எந்த விலாசத்தில் வசித்து வருகிறார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் தெரியாது. கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியன்று எதிரி எந்த விலாசத்தில் வசித்து வந்தார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் அவர் வீட்டில் விலாசம் எனக்கு தெரியாது அப்போது அவர் துணிக்கடை வைத்திருந்தார். எதிரிக்கு சொந்த வீடு உள்ளதா மற்றும் வேறு வருமானம் உள்ளதா போன்ற விபரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. எதிரி தாசம்பாளையம் தான் சொந்த ஊர் என்று சொன்னார். அங்கு நான் சென்றதில்லை. என்ன காரணத்திற்காக எதிரி கடன் வாங்கினார் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லாமல் புகாரில் மட்டும் வியாபாரத்திற்காகவும் குடும்ப செலவிற்காகவும் வாங்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் புகாரில் கிரீப் மென்ஸ் வேர், பி எஸ் சுந்தரம் ஸ்ட்ரீட், ஆப்போசிட் டு தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்க், அவிநாசி என்ற கடை எதிரி உடையதா என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் அங்கு தான் இருப்பார் அவருடையதா என்று எனக்கு தெரியாது. எதிரி பிசினஸ்க்காக வேறு ஒரு அக்கவுண்ட் வைத்திருக்கும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி மேற்ச்சொன்னேன் கடையில் வேலை செய்வதாகவும் என்னுடைய புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் அவர் அங்கு தான் இருப்பார் என்று கொடுத்தேன். எதிரிக்கு அந்த கடையில் மாத வருமானம் எவ்வளவு அவர் வருமான வரி செலுத்துகிறாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு போதிய வருமானம் இல்லை என்றும் நான் எதிரிக்கு கொடுப்பதற்கு ரூபாய் 7 லட்சம் பணம் என்னிடம் இல்லை என்றும் எதிரி எனக்கு நண்பர் என்று சொல்வது தவறு என்றும் என்னுடைய மாத வருமானம் என்னுடைய குடும்பத்திற்கு போதுமானதாக இருக்காது என்றால் சரியல்ல. 2020 ஆம் வருடத்தில் எதிரிக்கு ஏழு லட்சம் ரூபாய் பணம் கொடுப்பதற்கான தகுதி எனக்கு அந்த காலகட்டத்தில் இல்லை என்றால் தவறு. இந்த காசோலையுடன் கூடுதல் ஆவணங்களாக பிராமிசரி நோட்டு மற்றும் சொத்து ஆவணங்கள் எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான், நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். எதிரியும் அவரது அண்ணாவும் வண்டியில் கையொப்பப்பட்ட வெற்று காசோலைகளை வைத்திருந்தார்கள் என்றும் அதை அவர்கள் எங்கோ தவற விட்டு விட்டார்கள் என்றும் அதை நான் தவறாக எடுத்து பயன்படுத்தி இந்த காசோலை வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த காசோலையை யார் பூர்த்தி செய்து கொடுத்தார்கள் என்றுகுறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல அவர்தான் எழுதிக் கொடுத்தார். காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றும் அதில் உள்ள கையெழுத்துக்கள் எதிரியின் உடையது அல்ல என்றால் சரியல்ல.எதிரிக்கும் எனக்கும் எந்த வரவு செலவும் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றும் அவர் என்னுடைய நண்பர் அல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(Sd.) N.Keerthana
**நீதித்துறை நடுவர்,**
**அவிநாசி.**